**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 169/2016**

Deposition of **PW.2** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tr. G. Mahavishnu, Gr. III Bench Clerk of this court, on 07.07.2026 in accordance with the provision of Act 1 of 1873.

Name : சின்னசாமி Father's Name : சத்யராமன்

துவக்க நேரம்: 03.10 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

**1, 3, 4** பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் 5-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு ஆங்கிலம் எழுத படிக்கத் தெரியுமா என்றால் ஒவ்வொரு எழுத்து மட்டும் தெரியும். இவ்வழக்கின் வாதிகள் என்ன பரிகாரம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ரோடு பிரச்சினைக்காக தாக்கல் செய்துள்ளார்கள். முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள ஆங்கில வார்த்தைகளை யார் எழுதியது என்றால் நான் தமிழில் கூறினேன், வழக்கறிஞர் ஆங்கிலத்தில் எழுதினார்.

2. தாவா வண்டிப்பாதையான ABCDEFGH என்பது எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது என்றால் கருமந்துறையிலிருந்து சூலாங்குறிச்சி செல்லும் தார் ரோடான வேலம்பட்டு பஸ் ஸ்டாப்பில் ஆரம்பித்து அண்ணாமலை காட்டிற்கு சென்று முடிகிறது. வண்டிப்பாதையின் ABCDEFGH என்ற பகுதி எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது என்றால் ABCDEFGH என்பது பற்றி நான் கூறவில்லை, ஆனால் அந்த பாதை அண்ணாமலை காட்டில் முடிகிறது. நான் சொல்வது தவறு என்றாலும் அதுபோல் வண்டிப்பாதை எதுவும் அண்ணாமலை காட்டில் முடியவில்லை.

3. தாவா வண்டிப்பாதையானது எந்த சர்வே எண்ணில் செல்கிறது என்றால் ச.எண்.235-ல் உள்ளது. நான் சொல்லும் சர்வே எண் தவறு என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண்ணில் உள்ள சொத்திற்கு பிரதிவாதிகள்தான் வரி செலுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா வண்டிப்பாதையின் நீளம் எவ்வளவு என்றால் சுமார் 1500 அடி இருக்கும். தாவா வண்டிப்பாதையானது பிரதிவாதிகளுக்கு சொந்தமான பட்டா நிலத்தில் செல்கிறது என்றால் சரியல்ல, அவர்களுக்கும், வண்டிப்பாதைக்கும் சம்மந்தமில்லை.

4. தாவா வண்டிப்பாதையை நீதிமன்ற ஆணையர் மூலம் அளவீடு செய்ய வாதிகள் தரப்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதா என்றால் இல்லை. வாதிகள் தாக்கல் செய்துள்ள வழக்கின் முழு விவரம் தெரியுமா என்றால் வழி இல்லை என்று பிரச்சினை செய்துகொண்டார்கள், அது தொடர்பாக வழக்கு தாக்கல் செய்த விவரம் தெரியும். தாவா வண்டிப்பாதையில் 900 அடி நீளம் உள்ள பாதையானது 1-ம் பிரதிவாதியின் பட்டா நிலத்தில் அவர்களது சொந்த பயன்பாட்டிற்காக போடப்பட்ட பாதை என்றாலும் அந்த பாதையில் வாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்றாலும் சரியல்ல, வாதிகள் புறம்போக்கு நிலத்தில் உள்ள பாதைக்காகதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள்.

5. இவ்வழக்கின் 1 முதல் 4 பிரதிவாதிகள் வாதிகளுக்கு எதிராக அ.வ.எண்.322/2014 என்ற வழக்கை தாக்கல் செய்து நிலுவையில் இருந்து வருகிறது என்றால் அது பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் புறம்போக்கு நிலத்தில் எந்த வண்டிப்பாதையும் வாதிகள் பயன்பாட்டில் இல்லை என்றாலும் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

6. 1,3,4 பிரதிவாதிகளின் பட்டா நிலத்தில் செல்வதற்கு வாதிகளுக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். வாதிகளுக்கு உரிமை இல்லாத வண்டிப்பாதையில் உரிமை

இருப்பதாக குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்து அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்க வாதி என்னை அழைத்து வந்துள்ளார் என்றாலும் அவர் கூறியதன் அடிப்படையில் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல, அவ்வாறு பொய் சாட்சியம் அளிக்க எந்த அவசியமும் எனக்கு இல்லை. ச.எண்.235-ல் உள்ள வண்டிப்பாதையானது பிரதிவாதிகள் நிலத்தினை ஒட்டி அமைந்துள்ளது என்றாலும் பிரதிவாதிகள்தான் அந்த பாதையை பயன்படுத்தி வருகிறார்கள் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.

வாதி தரப்பு மறுவிசாரணை இல்லை.

முடிவு நேரம்: 03.45 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/- D. Jansi Rani,
Principal District Munsif (FAC), Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No.169/2016, Dt.07.07.2026.